பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2030 மார்கழி 26 திங்கட்கிழமை(10-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:39

# ஜனாதிபதியைக் கொலைசெய்து ராணுவ அரசு அமைக்க திட்டம்!

## டிசெ.18 சம்பவம் குறித்து ரகசியப் பொலீஸார் தகவல்

கொழும்பு,ஜனவரி 10

**கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி ஜனாதிபதியைக் கொலை செய்து விட்டு இராணுவ அரசு ஒன்றை அமைப்பதற்கு சதித்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது என்று இரகசியப் பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

**இந்த சதித்திட்டத்துக்கு கோடீஸ்வர வர்த்தகர்கள், தனியார் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சில இராணுவ அதிகாரிகள் ஆகியோர் உடந்தையாக இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு நகர மண்டப வளாகத்தில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொலைசெய்ய எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்தச் சதித்திட்டம் தொடர்பான விவரங்கள் தெரிய வந்தன என்றும் -

இந்தத் திட்டத்தில் விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)


## பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஜன.10

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலமான பயணிகள் கப்பல் சேவை நாளை இடம்பெறவுள்ளதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

கப்பலில் பயணம் செய்ய ரிக்கெட் பெற்றவர்களையும் பயண அனுமதி பெற்று ரிக்கெட் பெறாதவர்களையும் இன்று காலை 9.30 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ்.சிவில்நிர்வாக அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அமரர் குமார் பொன்னம்பலத்தின் இறுதி ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

# குமார் பொன்னம்பலத்தின் பூதவுடல் தீயுடன் சங்கமம்

## இறுதி யாத்திரையில் பல்லாயிரக்கணக்கானோர்

கொழும்பு,ஜன.10

வெள்ளவத்தையில் கடந்த புதன்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க் காங்கிரஸ் செயலதிபர் குமார் பொன்னம்பலம் நேற்று நண்பகல் 12.55 மணிக்கு தீயுடன் சங்கமமானார்.

நேற்றுக்காலை 10.00மணிக்கு அமரரின் 'கீதாஞ்சலி' இல்லத்தில் கனத்தை மயானத்தில் இடம் பெற்ற இறுதிக்கிரியைகளை அடுத்து அவரது மகனான கஜேந்திரகுமார் தந்தையின் சிதைக்குத் தீ மூட்டினார்.

சைவ முறைப்படி இறுதிக்கிரியைகள் நடைபெற்றதை அடுத்து அங்கு அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் டெஸ்மன் பெர்னாண்டோ, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்படப் பலர் உரையாற்றினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



குமாரின் பாரியார் யோகலக்ஷ்மி இறுதி அஞ்சலி செலுத்துகிறார்.

## வடக்கு-கிழக்கில் துக்கம்

அமரர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வடக்கு - கிழக்கில் நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.நகரில் கடைகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகம் உட்பட பல இடங்களில் அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

வன்னியில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுக் கடைகள் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. நினைவுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

திருகோணமலையிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(இ-3-7-139-150)

## பல்கலை. மாணவர் கறுப்புப்பட்டி அணிந்து துக்கம் அனுஷ்டிப்பர்

யாழ்ப்பாணம்,ஜன.10

தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலதிபர் குமார் பொன்னம்பலத்தின் கொலையைக் கண்டித்தும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்றும் நாளையும் கறுப்புப்பட்டி அணிந்து துக்கம் அனுஷ்டிப்பர்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரை அதிரவைக்கும் ஷெல்கள்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ். கரையோரப் பகுதியில் சில இடங்களும் தனங்களப்பு, அல்லிப்பளைப் பகுதிகளும் நேற்றுக் காலை முதல் ஷெல்தாக்குதல்களினால் அதிர்ந்தவண்ணம் இருந்தன. கொழும்புத்துறை, மணியந்தோட்டம் பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன. இச்சம்பவங்களினால் அப்பகுதியிலுள்ள தென்னை மரங்கள் சிலமுறிந்து நாசமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஹெலியில் இருந்து வேலணை(?) தீவுப் பகுதி நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (இ-3-15-30-139)

## உலகத் தமிழ் அமைப்புகள் குமாரின் மறைவுக்கு அஞ்சலி

லண்டன், ஜன10

குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு உலகத் தமிழர் அமைப்புகள் பல அனுதாபச்செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, டென்மார்க் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம், ஜெனீவா உலகத்தமிழர் ஒன்றியம், கனடா உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம், பிரான்ஸ் தமிழீழ மருத்துவ மாணவர் ஒன்றியம், தமிழ் மனித உரிமைகள் மையம் போன்ற பல அமைப்புகள் தமது அஞ்சலியைத் தெரிவித்துள்ளன.

பாரிஸில் நேற்று முன்தினம் இரங்கற் கூட்டம் ஒன்று நடைபெற்றது. லண்டனிலும் அஞ்சலிக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

## நினைவுத்தூபி முன்பாக அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.10

உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்த தியாகிகள் நினைவான 25ஆவது வருடஅஞ்சலி நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக இடம்பெறும்.

இதில் பல்துறை சார்ந்தவர்களும் பங்குபற்றி உரைநிகழ்த்துவர்.

(இ-3)

## களுத்துறையில் காயமடைந்த மற்றொரு கைதி மரணம்

கொழும்பு,ஜன.10

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற மோதல்களில் காயமடைந்தவர்களில் மற்றுமொரு கைதி நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அந்தக் கைதியின் பெயர் விவரங்கள் நேற்று இரவு வரை வெளியாகவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மோட்டார் தாக்குதல் தனங்களப்பில் தொடர்கிறது

தனங்களப்பில் உள்ள படையினரின் முன்னரங்கநிலைகள் மீது விடுதலைப்புலிகள் நேற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி இந்தத் தாக்குதலை முறியடித்து விட்டனர் என்றும் -

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்றும் தேடுதல் 129 தமிழர்கள் கைதாகினர்

கொழும்பு மாவட்டத்தில் இரு இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 9 பெண்கள் உட்பட 129 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மீரிகாணப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தேடுதலில் 9 பெண்கள் உட்பட 44 தமிழர்களும் 4 சிங்களவர்களும் கைது செய்யப்பட்டனர் என்றும் -

இவர்களில் பெரும்பாலானவர்கள் அந்தப் பகுதியில் நிரந்தரமாக வசிக்காதவர்கள் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

அதேநேரம் - நேற்று மாலை 6

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 3 ஆயிரத்து 326 குடும்பங்கள் தென்மராட்சியில் இடம்பெயர்வு

கடந்த மாதம் தென்மராட்சிக் கரையோரப் பகுதிகளில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களால் இப் பகுதிகளிலிருந்து 3 ஆயிரத்து 326 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 798 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகப் பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சி தெற்குப் பகுதியான தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி, தச்சன்தோப்பு நாவற்குழி ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் தென்மராட்சியின் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளிலும் வலிகாமம் பகுதிகளிலும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சுகாதாரத் தொண்டர் பயிற்சி

நெல்லியடி, ஜன. 10

யுனிசெவ் நிறுவன அனுசரணையில், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், சுகாதாரத் தொண்டர்களுக்கான மூன்று நாள் பயிற்சி இம்மாதம் 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறும்.

30 தொண்டர்கள் கலந்து கொள்ளும் இப்பயிற்சி மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தர் திருமதி எஸ். இலக்குமிதேவி தலைமையில் நடைபெறும்.

இப்பயிற்சியின்போது, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கருத்துரை வழங்குவர். (இ-109)

# கூட்டுறவுச் சங்கங்களில் வங்கிச் சேவைப் பிரிவு

அரியாலை, ஜன. 10

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களில் வங்கிச்சேவைப் பிரிவு ஒன்றை இம்மாத இறுதிக்குள் ஆரம்பித்து வைப்பதற்கான முன்னேற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக பரிசோதகர் சு. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வங்கிச்சேவைப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்குமுகமாக தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வங்கிச்சேவையின் செயற்பாடுகள் சம்பந்தமான தொடர் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுச் சபையும், மாவட்ட கூட்டுறவுத்திணைக்களமும் 14பணியாளர்களுக்கு இந்தப் பயிற்சி நெறியை வழங்கி வருகின்றன.

(ஐ-17)

## (பவள விழா வாழ்த்து)

பவளவிழாக்கண்ட சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள்

இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து
சைவத்துக்கும் தமிழுக்கும் நற்பணியாற்ற
இறையருளை வேண்டி நிற்கிறோம்.

பன்னாலை திருவெம்பாவை பஜனை
கூட்டுப் பிரார்த்தனைச் சபை.

(72560)

## பாடசாலை பஸ் சேவை

பாடசாலை பஸ் சேவை கோண்டாவிலில் இருந்து இன்று (10—01—2000) தொடக்கம் ஆரம்பமாக உள்ளது.

மாணவர்களுக்கான சலுகைகள் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஸ்ரீமில் 303, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

[725,5]

## கதிரை பின்னுதல்

750 கதிரைகளைப் பின்னுவதற்கு விலைக் கூறு கோரப்படுகிறது. விண்ணப்பிப்போர்

14, மணிக்கூட்டு வீதியில் அமைந்த யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் காரியாலயத்திற்கு 12-01-2000 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு

சமுகமளித்து கதிரைகளைப் பார்வையிட்டு உடன் கேள்விக் கூறைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாவட்டச் செயலாளர்

14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/10560]

## தசாக கிருஹஜஞ்ஞ அழைப்பு

01—01—2000 சனிக்கிழமை அன்று
சிவபதமடைந்த

சிவஸ்ரீ வி. சிவசாமிக்குருக்கள்
(தேவு)

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்,

10—01—2000 திங்கள் காலை 10, 00 மணி தசாகம்
11—01—2000 செவ்வாய் காலை 10, 00 மணி ஏகோதிஸ்டம், மாசியம்
12—01—2000 புதன் காலை 10,00 மணி சபிண்டீகரணம்
13—01—2000 வியாழன் மதியம் 12.0C மணி கிருஹஜஞ்ஞம்

தகவல்:
குடும்பத்தினர்.

23/5, சிவன் கோயில் வீதி,
திருகோணமலை.
T. P. 026 — 20237

[சி/10559]

## கண்ணீர் அஞ்சலி

வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் எம்முடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

திரு. ஸ்ரீ. மகிந்தா
அவர்களின் அன்புத் தந்தையார்

துரைசிங்கம் ஸ்ரீ பத்மநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
சங்கானை.

[72556]


## புலமைப்பரிசில் 2000

மாதம் இருதடவைகள்
வெளியாகும்
ஊக்குவிப்பு
வினாக்கொத்து
I,II

தை மாதத்துக்குரியதை
இப்போது பெற்றுக்
கொள்ளலாம்.

BOND யாழ்நகர்

(72553)

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L
2000, 2001. 2002

கணக்கீடு
(D. SAM)
தமிழ்
(A. S. கெங்காதரன்)
இந்துநாகரிகம்
(A. S. கெங்காதரன்)

1999 மீட்டல் வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள்
ஆரம்பமாகின்றன.
விவரங்களிற்கு:
நிர்வாகி.
பிரத்தியேக வகுப்புகள்
76/02, கோயில் வீதி,
(U. N. D. P. அருகில்)
யாழ்ப்பாணம்.

(72546)

## ராஜா

யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
அவள் வருவாளா
10.30, 2.30

[சி/10487]

## நாகம்ஸ்

சுன்னாகம்
வினித், சுலக்ஷனா
நடித்த
ஆவாரம்பூ
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)

[72534]

## லிபேட்டி

அச்சுவேலி
இன்னும் சில தினங்களுக்கு
சரத்குமார், தேவயானி
நடித்த
பாட்டாளி
(புதிய வெளியீடு)
T. P. 070-212223
070-212678

[72561]


# மரண அறிவித்தல்கள்

## ஐயம்பிள்ளை சின்னத்துரை

(பிரபல வர்த்தகர்,
உரிமையாளர், ஐ. சின்னத்துரை அன்சன்ஸ்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியில் வசித்தவருமான ஐயம்பிள்ளை சின்னத்துரை 08—01—2000 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ. லிங்கம்
(லிங்கம் களஞ்சியம்)

இல. 79. சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(72554)

## பொன்னுத்துரை நவசுந்தரலிங்கம்

(மலேசியா)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நவசுந்தரலிங்கம் அவர்கள் மலேசியாவில் காலமானார்.

அன்னார் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் மலேசியாவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொ. சண்முகம்பிள்ளை, இராசதுரை மகேஸ்வரி (நவாலி) மற்றும் பொ. நாராயணலிங்கம் (இளைப்பாறிய ஓவசியர், P.W.D), திருமதி மகாயோகேஸ்வரி சிவஞானம் (பரணி, கோண்டாவில்), திருமதி பரமேஸ்வரி சதாசிவம் (கொழும்பு), திருமதி இராஜேஸ்வரி கனகரட்ணம் (கோண்டாவில்), பொ. உருத்திரசிங்கம் (லண்டன்), பொ. சோமசூரியசிங்கம் (சிங்கம் பார்மஸி), காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி பரமேஸ்வரன், பொ. சுந்தரஆனந்தா (சவூதி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம. சிவஞானம்
(பரணி)

ஐங்கரபவனம்.
கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

(72557)

## சிவசம்பு ஆனந்தநடராசா

(மண்டைதீவு)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு ஆனந்த நடராசா 08-01-2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவசம்பு—யோகம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், சிந்தாமணி, பார்வதிப்பிள்ளையின் மருமகனும், சிவசோதியின் அருமைக் கணவரும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, ரதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மோகன் (கொழும்பு), தயாளன் (கனடா), ஜெயந்தன் (சுவிஸ்), சுதர்சன் (கனடா), முகுந்தன் (கொழும்பு), திலீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற நந்தினி, கமலினி, சிவாஜினி, கௌசலா ஆகியோரின் மாமனாரும், கஜீபன், சுஜீபன், நல்லுஜன், அபிஜெயன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் (விவாகப் பதிவாளர், வேலணை), இராமசாமி, ஏகாம்பரம் மற்றும் இராசகுலநாயகி, யோகநாயகி, காலஞ்சென்ற நடேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், சிவநாதன் (ப. நோ. கூ. ச. வேலணை), இராஜேஸ்வரி, சோதிநாதன் (லண்டன்), மயூரநாதன் (லண்டன்), ராணி சிவகாந்தி, ஜெயகாந்திநாதன் (ஆஸ்திரேலியா), நித்தியகாந்தி, சிறி, சுகதா, கண்ணன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி ரதி ஏகாம்பரம்
(சகோதரி)
38 8 மணல்தறை ஒ[illegible],
கந்தர்மட[illegible],

இ. சிவநாதன்
([illegible]ருமகன்)
வேலணை -05

59/1, மூர்ஸ் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு- 06,
T.P. 500536.

(72548)

## இமயமலைச் சாரலைக் கடந்து
# கால்நடையாக இந்தியாவுக்குள் தப்பி வந்த இளம் திபெத் துறவி!

தரம்ஸாரா, ஜன. 10

திபெத்தின் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவரும் சினா மற்றும் திபெத் அரசியல் தலைவர்களால் அங்கிகரிக்கப்பட்டவருமான — பதினான்கு வயதேயான — ஹரம்பாலாமா திபெத்தை விட்டு தப்பியோடி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இமயமலைச் சாரல்கள் ஊடாக சில பௌத்த பிக்குகள் பின் தொடர 7 நாள்கள் தொடர்ந்து நடந்து அவர் இந்தியாவுக்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியாவின் தரம்ஸாரா நகரில் ஆச்சிரமம் அமைத்து செயற்பட்டு வரும் தலாய்லாமா தலைமையிலான திபெத்திய அரசிடம் ஹரம்பாலாமா நேற்று முன்தினம் வந்தடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திபெத்திய பௌத்த மதத்தின் இரண்டாவது மிகப் பெரிய பிரிவின் தலைவரின் மறுபிறப்பு ஹரம்பாலாமா என்று 1992 ஆம் ஆண்டு சினாவும் திபெத்திய அதிகாரிகளும் அங்கீகரித்திருந்தனர்.

நாட்டை விட்டு தப்பி வந்த ஹரம்பாலாமா தற்போது தரம்ஸாராவில் உள்ள தலாய்லாமாவின் உத்தியோகபூர்வ விருந்தினர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார். திபெத்தை தொடர்ந்து தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக சினா இதுவரை ஹரம்பாலாமாவைப் பயன்படுத்தி வந்தது. தற்போது அவர் திபெத்தை விட்டு தப்பியோடி இருப்பது திபெத் தொடர்பான சீனாவின் ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவு என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். திபெத்தில் உள்ள தனது மடாலயத்தில் தங்கி இருந்த ஹரம்பாலாமா தூரத்தில் உள்ள மலைகளுக்கு மத வழிபாடு செய்யச் சென்று வருவதாகக் கூறி சீனக் காவலர்களை நம்ப வைத்து விட்டே அங்கிருந்து தப்பி ஓடியதாகக் கூறப்படுகின்றது. 40 ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவுக்கு எதிராக திபெத்தில் இடம்பெற்ற புரட்சி தோல்வியில் முடிந்த பின்னர் அப்போதைய ஆன்மீகத் தலைவரும் தற்போது இந்தியாவில் இருந்து செயற்பட்டு வரும் திபெத்திய அரசின் தலைவருமான தலாய்லாமாவும் இவ்வாறே திபெத்தை விட்டு தப்பி இந்தியா வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரம்பாலாமா தமது மதம் தொடர்பான கலைப் பொருள்களைச் சேகரிக்கவே வெளிநாடு சென்றுள்ளதாகவும் சீன அரசுக்கு துரோகம் இழைக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்றும் சீன அரசு சார்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–6)

## அத்வானியின் பாதுகாப்பு தீவிரம்

இந்தியன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் 189 பயணிகளுடன் கடந்த மாதம் கடத்தப்பட்டதை அடுத்து இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியின் பாதுகாப்பு

**உலக அரங்கில்**

அதிகரிக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அவரது வீட்டுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அத்வானி மேற்கொள்ளும் விமானப் பயணங்களின் போது வழங்கப்படும் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் உள்துறை அமைச்சர் பயணம் செய்யும் விமானங்களில் பிரயாணம் செய்யும் ஏனைய பயணிகள் வழமையைவிடவும் தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–6–5)

## இந்திய விமானக் கடத்தல் திரைப்படமாகின்றது

புதுடில்லி, ஜன. 10

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற இந்திய பயணிகள் விமானக் கடத்தலை வைத்து திரைப்படம் எடுக்க இந்திய படத் தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று திரைப்படத் தலைப்புக்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாக ''த ரைம்ஸ் ஒப் இந்தியா'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

''ஒருவாரம் நீடித்த அந்த விமானக் கடத்தலை வைத்து திரைப்படம் எடுப்பதில் படத் தயாரிப்பாளர்கள் மத்தியில் போட்டி நிலவுகிறது. சிலர் திரைப்படத்தை நிறைவு செய்யும் தறுவாயில் உள்ளனர். திரைப்படத்துக்கு 'த்ரில்' ஆன பின்னணியை இந்த விமானக் கடத்தல் தருகிறது. முதலில் திரைப்படத்தை வெளியிடுபவருக்கே அனுகூலங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது'' என்று அந்தப் பத்திரிகை மேலும் கூறிபது (3–4)

## விலங்குகளை கொல்வதை தடுக்க ரஷ்யாவில் விரைவில் சட்டம்

மொஸ்கோ, ஜன. 10

ரஷ்யாவில் விலங்குகளைக் கொலை செய்வதைத்தடுக்க குற்றவியல் சட்டங்கள் விரைவில் அமுல் செய்யப்பட உள்ளன.

இந்த சட்டங்களை உருவாக்குவதற்காக பிரெஞ்சு நடிகை ரிச்சர்ட் பாதட் ரஷ்ய அரசுக்கு உதவ முன்வந்துள்ளதாக மொஸ்கோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரெஞ்சு நடிகையும் ரஷ்ய பதில் அதிபர் விளாடிமிர் புடினும் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர். கடந்த மாத இறுதியில் விளாடிமிர் புடின் நடிகை ரிச்சர்ட்டுக்கு எழுதிய கடிதத்தில் ரஷ்யாவில் உள்ள விலங்குகளின் எதிர்காலம் பற்றி ரிச்சர்ட் காட்டும் அக்கறைக்கு நன்றி தெரிவித்துள்ளார்: மிருகங்கள் மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்படுவதற்கு முடிவுகட்ட சிறந்த சட்ட அமைப்பு ஒன்று தேவை என்றும் புடின் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## காத்மண்டு தூதரகம் ஊடாக
# புலிகள் உட்பட தீவிரவாத அமைப்புகளுக்கு பாக். உதவி

புதுடில்லி, ஜன. 10

விடுதலைப் புலிகள் உட்பட பல தீவிரவாத இயக்கங்களுக்கு காட்மண்டுவில் உள்ள பாகிஸ்தானிய தூதரக அதிகாரிகளும், ஐ. எஸ். ஐ. உளவு அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகளும் உதவிவருவதாக மேற்கு வங்க உள்துறை அமைச்சு வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அல்பா, கே. சி. எஸ். எனப்படும் பாகிஸ்தான் கொமாண்டோப் படை மற்றும் காஷ்மீரில் செயற்படும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்கள் என்பன பாகிஸ்தானின் ஆதரவைப் பெற்றுள்ளதாகவும் —

இந்த அமைப்புக்களைச் சேர்ந்தவர்களை பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளும், ஐ. எஸ். ஐ. அதிகாரிகளும் அவ்வப்போது சந்தித்து வந்துள்ளதாகவும் —

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-க-6]

## சுவிஸ் வாழ் தமிழர்கள் கண்டனப் பேரணி

ஜெனீவா, ஜன. 10

புங்குடுதீவில் அந்தணப் பெண்ணான சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து சுவிட்ஸர்லாந்து வாழ் தமிழ் மக்கள் அங்கு கண்டனப் பேரணி ஒன்றினை நேற்று நடத்தவிருந்தனர்.

இளம் தாயான சாரதாம்பாளுக்கு நிகழ்ந்த இந்தக் கோரமான சம்பவம் அனைத்துத் தமிழ் மக்களையும் உலுக்கியுள்ளதாக இந்த கண்டனப் பேரணியை ஒழுங்கு செய்தவர்கள் கூறியுள்ளனர்.

(உ-4)

# குறோஸ்னி அருகே கடுஞ் சமர் மூண்டது!

## ரஷ்யப் படைகள் நகரில் நுழைந்தன?

குறோஸ்னி, ஜனவரி 10

செச்சினியாவில் இடம்பெற்று வரும் தாக்குதல்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ரஷ்யப் படையினர் நேற்று முன்தினம் அறிவித்திருந்த போதும் தலைநகர் குறோஸ்னிக்கு அருகே நேற்று கடும் சண்டை மூண்டது.

ரஷ்யப்படைகள் நகரினுள் நுழைந்து விட்டதாக நேற்று நண்பகல் வெளியான ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

தீவிரவாதிகள் விஷவாயுத் தாக்குதல்களை நடத்தி வருவதால் அத்தாக்குதலில் இருந்து தப்பி பொது மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு அவகாசம் வழங்குவதற்காக தாக்குதல்கள் இடை நிறுத்தப்பட்டதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். எனினும் குறோஸ்னி மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்துவதற்காக படைகளை மறுசீரமைப்புச் செய்வதற்கான அவகாசம் வேண்டியே ரஷ்யப் படையினர் தாக்குதலை நிறுத்தியதாக இராணுவ அவதானிகள் தெரிவித்தனர்.

தாக்குதலை தீவிரப்படுத்துவதற்காக கள முனையில் இருந்து இரண்டு படைத் தளபதிகளும் உடனடியாக இடம் மாற்றம் செய்யப்பட்டனர். இது வழமையான இடமாற்றமே என்று ரஷ்யா தெரிவித்தது.

ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள இத் தருணத்தில் பதில் ஜனாதிபதி விளாடிமிர் புடின் செச்சினிய வெற்றியை எதிர்பார்த்திருப்பதால் ரஷ்யப் படையினர் மீதான அழுத்தம் அதிகரிக்கின்றது என்று அவதானிகள் கூறுகின்றனர்.

(ஐ-6)

## சட்டப்பேரவை இடைத்தேர்தல்

சென்னை, ஜன. 10

தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 30 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல்கள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடத்தப்படும் என்று இந்தியத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

காலஞ்சென்றவர்களதும் பதவியை ராஜினாமாச் செய்தவர்களினதும் இடங்களை நிரப்புவதற்காக இந்த இடைத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

(ஐ 6-5)

## இஸ்ரேல் - சிரியா பேச்சு நீடிப்பு

நியூயோர்க், ஜன. 10

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஒருநாள் இடைவெளியின் பின்னர் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

இந்தப் பேச்சுக்கள் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் பேச்சுக்களின் வேகம் இன்னும் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இதுவரை இடம்பெற்ற பேச்சுக்களின் விளைவாக எல்லைப் பிரச்சினை, இரு நாட்டுப் பாதுகாப்பு, தண்ணீர்ப் பிரச்சினை மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுமுகமான உறவுகளைப் பேணுதல் ஆகிய நான்கு விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் இன்று தாயகம் திரும்புகின்றார்.

பராக் நாடு திரும்பினாலும் இஸ்ரேல் அதிகாரிகள் தொடர்ந்தும் அமெரிக்காவில் தங்கி இருந்து சிரிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்கள்.

(ஐ–6–5)

## ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம்!
### இந்து அமைப்பு சூளுரை

புதுடில்லி, ஜன. 10

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டுவது தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதுவாக இருப்பினும் சர்ச்சைக்குரிய அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டியே திருவோம்.

இந்து அடிப்படை வாத அமைப்பான விஷ்வ இந்து பரிஷத் இவ்வாறு தெரிவித்துள்ளது. இராமேஸ்வரத்தில் இடம்பெற்ற அந்த அமைப்பின் இரண்டு நாள் தேசிய மாநாட்டின் பின்னர் இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டியெழுப்புவதற்கு இந்துக்கள் 100 வருடங்கள் காத்திருக்க மாட்டார்கள் என்று அமைப்பின் பொதுச் செயலாளர் ரவீன் போக்காடியா தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் மத மாற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று அமைப்பின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ–6–5)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோ 21 3246, செலக்ட் 2 ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: E. ரஞ்சித் 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P 2591.

(72541)

### தவறிவிட்டது

கீரிமலைவீதி, சித்தன்கேணி என்னும் முகவரியைச் சேர்ந்த கனகசபை கலியுகதாசன் என்பவரது தேசிய. அ. அட்டை, விசேட அ. அட்டை (090406515) இரண்டும் 31-12-99 இல் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பொஸ்கோ 3, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(72533)

புலோப்பளை கிழக்கு, பளை என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி மரியநாயகம் அற்புதமலர் என்பவரின் தேசிய அ. அட்டை (இல-587200392V) 6-1-2000 இல் யாழ். வேம்படிச் சந்திக்கும், பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரிக்கு அனுப்பி உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (72532)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை பிரதம தாதிய உத்தியோகத்தர் திருமதி நவமணி பேரின்பநாதன் ஆகிய எனது தேசிய அ. அட்டை (455752671V), விசேட அ. அட்டை, தொழில் அ. அட்டை என்பன 23-12-1999 யாழ். பஸ்நிலையத்தில் பணத்துடனான பேசுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி வைத்தியசாலையிலோ அல்லது சிவா நறுமணப்பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ கையளித்து சன்மானத்தைப் பெறவும்.

(72544)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில பிற்பகல் 12.00 இல் இருந்து வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (72473)

### 12 இராசிப் பலன்கள்

12 இராசிகளுக்கும் விரிவான பலன்கள் எழுதப்பட்ட நூல் எங்கும் விற்பனையாகின்றது. ஆசிரியர். சோதிட ஞானி சண் — மாஸ்ரர்: விலை ரூபா — 15. வெளிநாட்டில் வாழும் உறவுகளுக்கும் பலன்கள் எழுதப்பட்டுள்ளன. ஆ. சண்முகலிங்கம், பூநாறி மரத்தடி, கொக்குவில். (72510)

## மரக்கறி விற்பனை நிலையம்

வலி. கிழக்கு, ஜன. 10

நல்லூர் பிரதேசசபை நலன்புரிச் சங்கத்தினால் பொது மக்களின் நலன்கருதி திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் நியாயவிலையிலான மரக்கறி விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பிரதேச சபையின் நலன்புரிச்சங்க நிதி மூலம் இந்த வியாபார நிலையத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (ஜ–180)


## காரைநகர் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வ-து)

பதவி வெற்றிடம் நிரப்புவதற்கான

## விண்ணப்பம் கோரல்

### வர்த்தக முகாமையாளர்

சம்பள அளவுத்திட்டம்:

$$165/88 - 10 - \frac{3100 - 4900}{80 \times 10 - 100 \times 10}$$

தகைமைகள்:

அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 165 / 88 — 11 ஆம் இலக்க சம்பளத்திட்டத்தில் மூன்று வருடத்துக்குக் குறையாத அனுபவமுள்ள முகாமை மட்டம் அல்லது மேற்பார்வைமட்டம், வர்த்தகத்துறையில் அல்லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 165 / 88 — 12 ஆம் இலக்க சம்பளத்திட்டம் பெற்றவர்.

அல்லது

ஆ) வர்த்தகம் / விற்பனை / நிர்வாகம் / பொருளியல் விசேட பட்டம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றவர்.

அல்லது

இ) கூட்டுறவு உயர்தரப் பத்திரம் / க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி பெற்று மேற்பார்வை மட்டத்தில் நான்கு வருட அனுபவம், சந்தைப்படுத்தல் / விநியோகம் / ஏற்றுமதி, இறக்குமதி செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனத்தில் அனுபவம் பெற்றவர்.

வயதெல்லை:

21 தொடக்கம் 45 வரை

தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாது ஒழிப்பதற்கும் வழிவகுக்கும்.

விண்ணப்ப முடிவு திகதி: 25 - 01 - 2000

சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
காரைநகர்.

09 - 01 - 2000 (சி/10557)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## நாகேசு தம்பிமுத்து

(உரிமையாளர் ரவர் கோப்பி பார்)

தோற்றம் 30—10—1923 மறைவு 11—12—1999

அன்புத் தெய்வமே ஐயாவே!
இப்பாரை விட்டு நீங்களகன்று
ஒரு திங்களகன்றதே!
எம் பாசமிகு தந்தையே!
உத்தமரே உங்கள் இனிய முகம்
காணாது தவிக்கின்றோம்
இனியேது செய்வோம்?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

82/3, யாழ்பாடி வீதி,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (72549)


## சீருடைத் துணிக்குப் பதிலாக கொடுப்பனவு வழங்க கோரிக்கை

திருநெல்வேலி, ஜன. 10

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் சீருடைத் துணிக்குப் பதிலாக வருடாந்தம் 10 ஆயிரம் ரூபா சீருடைக் கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் சங்க யாழ். கிளை சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

கொடுப்பனவு கிடைப்பதன் மூலம் தற்போது வழங்கப்பட்டுவரும் சீருடைத் துணியிலும் பார்க்க நல்லதரமுடைய துணியை தாம் கொள்வனவு செய்து ஆடை தயாரித்து அணியக் கூடியதாக இருக்கும் என்றும் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ – 135)


## ஏழாலை தெற்கு களபாவோடை

(வசந்தபுரம்)

## அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பிகை தேவஸ்தானத்தின்

வருடாந்த

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

உற்சவ ஆரம்பம் — 11-01-2000 செவ்வாய்க்கிழமை
ரதோற்சவம் — 19-01-2000 புதன்கிழமை
தீர்த்தோற்சவம் — 20-01-2000 வியாழக்கிழமை
தினமும் அபிஷேகம் காலை 6.00 பூசை 9.30
வசந்த மண்டப பூசை — 10.30
சொற்பொழிவு — 11.00
சுவாமி எழுந்தருளல் — 11.30

### சொற்பொழிவு

தலைமை:
பிரசங்கவாரிதி சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்
அவர்கள்

உற்சவ ஆரம்பம் சொற்பொழிவு:
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
அவர்கள்
[இளைப்பாறிய இராமநாதன் கல்லூரி அதிபர்]

தொடர்ந்து 10 நாள்களும் பிரபல சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

[72547] ஷ்ரீ தேவஸ்தானம்.



## உழவுஇயந்திரம்கூலிக்கு அமர்த்துதலும் தென்னோலை குத்தகைக்கு விடுதலும்

பளை, ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டங்களில் தேங்காய் ஏற்றுவதற்கும், உழவு செய்வதற்குமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 12 - 01 - 2000 அன்று காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்கள் அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வருடத்திற்குரிய ஓலைக் குத்தகை 01 - 02 – 2000 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் வழங்கப்படும்.

தோட்டங்களில் பறிக்கப்படும் தேங்காய் கூறுவிலைகள் வழமைபோல் மாதாந்தம் முதலாம் திகதி நடைபெறும். முதலாம் திகதி விடுமுறைதினமாக இருப்பின் அடுத்துவரும் வேலைநாளில் நடைபெறுமென அறியத்தருகின்றேன்.

சு. தவரத்தினசிங்கம்
பொறுப்பதிகாரி
ஜ. பெ. தோ. அபி. சபை,
இத்தாவில்,
பளை.

(சி/10555)



## கண்ணீர் அஞ்சலி

5-1-2000 அன்று அகால மரணமடைந்த தமிழ் மக்களின் தொண்டனும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அஞ்சா நெஞ்சுடன் அகில உலகரீதியில் குரல் கொடுத்தவரும் சட்டரீதியில் வாதிட்டவருமாகிய

சட்டத்தரணி

## குமார் பொன்னம்பலம்

அவர்களின் இழப்பு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்.

(சி/10558)

# 52 சதவீத இளைஞர், யுவதிகள் வேலை தேடி அலைகின்றனர்

## யாழ். இளைஞர் சேவை மன்ற மதிப்பீடு

வலி.கிழக்கு ஜன. 10

யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளில் 52சத வீதமானோர் வேலையின்றி இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கடந்த ஆண்டு நடத்திய கணக்கெடுப்பின் மூலம் இந்த மதிப்பீடு பெறப்பட்டது.

15 வயதுக்கும் — 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் குடாநாட்டில் மொத்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 702 பேர் உள்ளனர்.

இவர்களில் ஆண்கள் 52 ஆயிரத்து 968 பேர் ஆவர். பெண்களின் எண்ணிக்கை 59 ஆயிரத்து 739 ஆகும்.

இவர்களில்மொத்தம்52சத விதத்தினர் தத்தம் கல்வித் தராதரத்துக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்களைத் தேடி அலைந்து வருவது இந்தமதிப்பீட்டின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. (ஐ-180)

# 7 உபதபாலகங்கள் இயங்கவில்லை

திருநெல்வேலி, ஜன. 10

யாழ்.மாவட்டத்தில் உள்ள 140 உபதபால் அலுவலகங்களில் ஏழு உபதபால் அலுவலகள் இதுவரை செயற்படாத நிலையிலிருந்து வருகின்றன.

தெல்லிப்பழை தபால் அலுவலகப்பிரிவில் இரு உபதபால் அலுவலகங்களும் காங்கேசன் துறை தபால் அலுவலக பிரிவில் ஐந்து உபதபால் அலுவலகங்களும் இதுவரை இயங்காத நிலையில் இருந்துவருவதாகவும்—

இப்பகுதிகளில்மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுப் பாதுகாப்புப்பிரிவின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இவை மீண்டும் தமது சொந்த இடங்களில் செயற்படக்கூடியதாக இருக்கும் என்றும் யாழ். மாவட்ட பதில் தபால் அத்தியட்சகர் ச. சுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

மாவிட்டபுரம், குரும்பசிட்டி, கீரிமலை, மயிலிட்டி, பலாலி, தையிட்டி, ஊறணி ஆகிய உபதபால் அலுவலகங்களே தமது சொந்த இடங்களில் செயற்பட முடியாது மூடப்பட்டுள்ளன.

இதே வேளை—

காங்கேசன்துறை தபால் அலுவலகம் சுன்னாகத்தில் இடம்பெயர்ந்து செயற்பட்டு வருகின்றது. (ஐ-135)

## வகுப்புகள்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தப்படவிருக்கும் சைவப் புலவர் மற்றும் இளஞ் சைவப் புலவர் பட்டப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் இலவச வகுப்புக்களை நடத்தவுள்ளது. (ஐ-7)

# தனிமையில் வாழ்ந்த வயோதிபர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.10

தனிமையில் வாழ்ந்து வந்த இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை காலைசடலமாக மீட்கப்பட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்தவரும், தற்போது அரியாலையில் வசித்து வந்தவருமான விஜயரத்தினம் இராசரத்தினம் (வயது 80) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

முதல்நாள் இரவு படுக்கைக்குச் சென்ற இவர் மறுநாள் காலை சடலமாகக் காணப்பட்டார் எனக் கூறப்பட்டது.

சடலம் பொலீஸாரின்உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். பதில் நீதிவான் திருமதி சு. இளங்கோவன் மரண விசாரணையை மேற்கொண்டார்.

உறவினர்கள் வந்து சடலத்தைப் பொறுப்பேற்பதற்காக 3 நாள்கள் அதனை யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்குமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-7-15-86)

## வாசகர் திருமுகம்

### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கவனிப்பாரா?

கடந்த 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய இடங்களில் வசித்த மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி, வன்னி ஆகிய இடங்களுக்குச் சென்றிருந்தனர். பின்னர் 1996 ஆம் ஆண்டு மே மாதம் தமது இடங்களுக்குத் திரும்பி வந்தனர்.

இந்த இடைப்பட்ட காலத்தில் மக்கள் சொத்துக்கள். அரச சொத்துக்கள் என்ற பாகுபாடின்றி அவை அழிக்கப்பட்டோ சூறையாடப்பட்டோ இருந்தன.

இந்த நிலையில் அழிக்கப்பட்ட பாடசாலைச் சொத்துக்களை பதிவழிக்கும் நடவடிக்கை மூலம் இல்லாமல் செய்து பாடசாலை அதிபர்கள் தங்கள் ஓய்வூதியங்களையும் பிற கொடுப்பனவுகளையும் பெறுவதிலுள்ள தடைகளை நீக்குமாறு கல்வி அமைச்சு வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்குப் பணிப்புரை வழங்கியது.

வலிகாமம் கல்வி வலயம் அதன் கீழ் உள்ள பாடசாலைகளில் இதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டது. சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் பொருள் கணக்கெடுப்புக்களையும் அது சம்பந்தமான விசாரணைகளையும் நடத்தி முடித்து அமைச்சுக்கு அனுப்பியதன் மூலம் அனுமதியைப் பெற்று பதிவழிப்புக்களையும் முடித்து விட்டது.

ஆனால் யாழ் கல்வி வலயம் இதற்கு நேர் எதிர்மாறு கொண்டதாய் உள்ளது. பாதிக்கப்பட்ட பல பாடசாலைகளில் இன்னும் கணக்கெடுப்புக்களோ, விசாரணைகளோ நடத்தப்படவில்லை. இதனால் பல இளைப்பாறிய அதிபர்களும் இளைப்பாற இருப்பவர்களும் தங்கள் கொடுப்பனவுகளை உரியகாலத்தில் பெற முடியாத நிலையில் உள்ளனர். இதற்குக் காரணம் என்ன? சம்பந்தப்பட்ட நிதிக்கிளையின் திறமையின்மையா? அல்லது ஏனோ தானோ என்ற மனப்பான்மையா? அல்லது பின்னூட்டல் எதிர்பார்ப்பா? என்பது புரியாமலிருக்கிறது.

எனவே யாழ். வலய புதிய கல்விப்பணிப்பாளர் தனது நேரடி மேற்பார்வையில் இக்கணக்கெடுப்புக்களை நடத்துவதுடன் அந்த அறிக்கை உரிய நேரத்தில் அமைச்சுக்கு, திணைக்களத்தால் அனுப்பப்படுவதையும் உறுதிப்படுத்தவேண்டும். இதற்குப் புதிய கல்விப் பணிப்பாளர் உடன் கவனம் செலுத்துவதன் மூலம், தங்கள் சொந்த உடைமைகளையே இழந்து மனம் நொந்த நிலையில் நிற்கும் பல அதிபர்கள் தங்கள் கொடுப்பனவுகளை உரியகாலத்தில் பெறுவதிலுள்ள பெரும் தடைகளை நீக்க உதவுவாரென யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பலபாடசாலை அதிபர்கள் எதிர் பார்க்கின்றார்கள்.

— இ. அருமாநந்தம்.

யாழ்ப்பாணம்.

### யாழ். தபாலகத்தில் பக்ஸ்சேவை ஆரம்பிக்கப்படுமா?

இலங்கையிலுள்ள பல்வேறு தபாலகங்களும்'பக்ஸ்' காசுக்கட்டளைச் சேவையை மக்களுக்கு வழங்கி வருகின்றன. ஆனால் யாழ்ப்பாணம் தபாலகம் இன்னமும் இந்தச் சேவையை ஆரம்பிக்கவில்லை. பக்ஸ் காசுக் கட்டளை விநியோகிக்கப்பட்ட இரண்டு மணித்தியாலங்களுக்குள் பணம் உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற விதி இருப்பதால் இது தந்திக் காசுக் கட்டளையை விடச் சிறந்தது.

இந்தச் சேவையை ஆரம்பிக்குமாறு. யாழ்ப்பாணம் தபாலதிபரைக் கேட்டபோது ஏழு தொலைபேசிகளுடன் இயங்கிய யாழ்ப்பாணத் தபாலகத்தில் தற்பொழுது ஒரு தொலைபேசி மட்டுமே இருப்பதாகவும் இன்னும் ஒரு தொலைபேசி இணைப்பாவது கிடைத்தால் பக்ஸ் காசுக்கட்டளைச் சேவையை ஆரம்பிக்கலாம் என்றும் கூறினார்.

யாழ்ப்பாணம் பிரதித் தபால் அதிபர் நாயகம் யாழ்ப்பாணத் தபாலகத்துக்கு அதிக தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொடுத்து தபாலகத்தில் சேவையை விரிவுபடுத்துவாரா?

- ச. ஆ. கோபாலமூர்த்தி

திருநெல்வேலி.




## பெப்ரவரி இறுதியில் கிரிக்கெட் சுற்றுலாவுக்காக இலங்கை அணி பாக். விஜயம்

கொழும்பு, ஜன. 10

இலங்கை அணி அடுத்த மாத இறுதியில் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவுள்ள கிரிக்கெட் சுற்றுலாவின் போது மூன்று கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளிலும் மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாட உள்ளது.

இந்தத் தொடரில் விளையாடும் இலங்கை அணியில் அணியின் முன்னாள் அணித் தலைவர் அர்ஜுண ரணதுங்க இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

முன்னாள் உதவி அணித் தலைவர் அரவிந்த டிசில்வா, கழகங்களுக்கு இடையேயான சுற்றுப்போட்டி ஒன்றில் பங்குபற்ற இருப்பதால் பாகிஸ்தான் சுற்றுலாவுக்குச் செல்லவில்லை.

அண்மையில் இலங்கை அணி மேற்கொண்டிருந்த ஸிம்பாப்வே சுற்றுலாவில் அர்ஜுண ரணதுங்க, அரவிந்த டி சில்வா ஆகிய இருவருமே இணைத்துக்கொள்ளப்படவில்லை.

மேலும் இலங்கை'ஏ' அணியில் சிறப்பாக விளையாடிய உபுகே பெர்னாண்டோ, குமார் சங்கரா, நிமேஷ் பெரேரா, எரிக் உபசாந்த ஆகியோரும் இந்த அணியில் சேர்க்கப்பட்டு பாகிஸ்தான் செல்லவுள்ளனர். (ஐ-4-8)

## இந்திய அணி வீரர்களின் விவரம்

புதுடில்லி, ஜன. 10

ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இந்திய — ஆஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள இந்திய அணி வீரர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் நடந்து முடிந்த டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய வி. வி. எஸ். லக்ஷ்மன். விஜய் பரத்வாஜ், எம்.எஸ் கே. பிரசாத், கர்பஜன்சிங், ரி. குமரன், சடகோபன் ரமேஷ் ஆகியோருக்குப் பதிலாக சுனில் ஜோசி, ரொபின்சிங், ஜேக்கப் மார்ட்டின், சுனில் பிகே நிக்கல்சோப்றா ஆகியோர் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-4)

## இளைஞர் உலகக் கிண்ணம்: போட்டி நாளை கொழும்பில்

கொழும்பு, ஜன. 10

இளைஞர் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

16 நாடுகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில் 50 போட்டியாட்டங்கள் நடைபெறவுள்ளன.

நடைபெறவுள்ள சுற்றுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளன. ஏறக்குறைய எல்லா நாட்டு அணிகளும் இலங்கை வந்து சேர்ந்து விட்டன. கொழும்பில் நடைபெற்றுவந்த அசம்பாவிதங்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. எல்லாம்திட்டமிட்டபடியே நடைபெறும் என்று இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. (ஐ-4)

## விளையாட்டு விழாவுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 10

தீவுப்பகுதி தெற்கு — வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இந்த வருட விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ளும் விளையாட்டுக் கழகங்கள் யாவும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்டவையாக இருக்க வேண்டும் எனவும் —

பங்குபற்றும் போட்டியாளர்கள் மேற்படி பிரதேச செயலர் பிரிவில் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட வதிவிடத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் —

போட்டியாளர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும் என்றும்பிரதேச செயலர் செ. இரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-7-4)

## ஆஸி. வேகப்பந்து வீச்சாளர் லீ யின்மீது குற்றச்சாட்டு

சிட்னி, ஜன. 10

ஆஸ்திரேலிய அணியில் புதிதாக இடம்பிடித்துள்ள வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீயின் பந்து வீச்சு குறித்து குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்திய—ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டித் தொடரில் அவர் விளையாடிய முதலாவது போட்டியிலேயே அவருடைய பந்து வீச்சு குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை அல்ல என ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோ தெரிவித்துள்ளார்.

சொயிப் அக்தர், பிரெட்லீ என இவ்வாறு குற்றச்சாட்டு பட்டியல் தொடருமானால் புதிய பந்து வீச்சாளர்களை கிரிக்கெட் சமூகம் காணமுடியாமல் போகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

பொன்னான சந்தர்ப்பம்...

விரையுங்கள்!

இன்னும் 5 நாள்களுக்கு மட்டுமே

**மலிவு விலையில்**

- கிரிக்கெற் பாற்கள், பந்துகள்
- கவர்ச்சிகரமான பரிசுக்கிண்ணங்கள்
- பல்வேறு விளையாட்டுகளுக்கான தரமான உபகரணங்கள்


நிச்சயமாக உடனேயே வாங்கிட வேண்டும்.

**அருண்ஸ்**

**ஸ்போர்ட்ஸ் ஸ்டோர்**

347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/10544)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 — 03 — 1924

மறைவு 12 — 01 — 1993

**வல்லிபுரம் இராசமணி**

( ஓய்வு பெற்ற ஆசிரியர் )

திதி:- 10 - 01 - 2000

உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

100, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (72503)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 25 — 12 — 1914

உதிர்வு: 02 — 01 — 1998

அமரர்

**முத்து பொன்னம்பலம்**

(இளைப்பாறிய அதிபர்—முன்னாள் தலைவர்,
வடமாகாண ஆசிரிய சகாய நிதிச்சங்கம்)

திதி: 10—01—2000

எம் நெஞ்சமதில் என்றும் வாழும் அன்பின் ஐயாவே!
எம் நாள்கள் இனி எங்கே?
உள்ளமெல்லாம் உங்கள் மாறாத நினைவுகளால்
ஊன் உறக்கமின்றி வாழ்ந்திட்ட—
பதியாய், பாசமிகு மகளாய், ஆசைப்பேரப்பிள்ளைகளாய்
பரவுகின்ற உறவுகளாய் வாழ்ந்த நாம்
இனிதே எங்கள் பயணம் தொடர
தம் ஆசி வேண்டி
ஆத்ம சாந்திக்காக எம் குலதெய்வம்
காளியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

அருமை மனைவி, மகள்,
அன்புப் பேரப்பிள்ளைகள்.

''முத்து வாசா'',
கெருடாவில், தொண்டமனாறு. (72529)

## சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி. கிழக்கு, ஜன. 10

யாழ். பிரதேச செயலர் பிரிவில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கல்விகற்பிக்கும் முன்பள்ளி பாலர் பாடசாலைகளுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங்க உள்ளது.

சிறுவர்களுக்கு வழங்குவதற்காக 64 பந்துகளை யாழ். செயலக திட்டமிடல் பிரிவு ஊடாக 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கி உள்ளது. (ஐ-108)

## குறுந்தூர பஸ்சேவை

ஊர்காவற்றுறையிலிருந்து புங்குடுதீவு பெருங்காடு வரைக்குமான குறுந்தூர பஸ் சேவையொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேவையில்ஈடுபடும் பஸ் யாழ்நகரிலிருந்து விடியற் காலை புறப்பட்டு சாட்டி வீதியூடாக வங்களாவடிச் சந்தியினை சென்றடைந்து அங்கிருந்து வழித்தடம் 777 ஆம் இலக்க வீதியூடாக ஊர்காவற்றுறையினைச் சென்றடையும்.- பின்னர் அங்கிருந்து காலை 8. 45 மணிக்கு புங்குடுதீவு நோக்கிச் செல்கின்றது.

ஒரு நாளைக்கு இரு தடவைகள் இந்த பஸ்சேவை இடம்பெறுகின்றது. (ஐ-167)

## கடைகள் புனரமைக்கப்படும்

வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இப் புனரமைப்புப் பணிக்கென வட பகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை நிதியிலிருந்து சுமார் 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ-167)

## மின் கம்பங்கள் நடுகை

சண்டிலிப்பாய், ஜன. 10

பண்டத்தரிப்பு—சண்டிலிப்பாய் பிரதான வீதியில் பழைய மின் கம்பங்களுக்கு பதிலாக புதிய மின் கம்பங்கள் இலங்கை மின்சார சபை ஊழியர்களால் நடப்பட்டு வருகின்றன.

பண்டத்தரிப்பு,சில்லாலை, பிரான்பற்று, வடலியடைப்பு ஆகிய பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை.

இப்பகுதிகளுக்கு விரைவில் மின்சார விநியோகம் ஏற்படுத்தித் தருமாறு இங்குள்ள பொதுநல அமைப்புகளும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் மகளிர்கள் மூலம் இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச பொறியியலாளரைக் கேட்டுள்ளன. (ஐ-135)

## கட்டட வேலைகள் பூர்த்தி

பண்டத்தரிப்பு காடாப்புலம் என்ற இடத்தில் அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் மேற்பார்வையில் நிறுவப்பட்டிருக்கும் இப் புதிய வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு இம்மாத இறுதியில் செயற்பட ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★★★★★★

கல்விச்சேவையில் 30 ஆண்டுகளைப்பூர்த்தி செய்யும்

**அதிபர் திரு. செ. செல்வநாயகம்**

அவர்களைப் புத்தாயிரம் ஆண்டில் அவரின் கல்விப்பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

யா/நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை சமூகம்,
யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை சமூகம். [72542]

## முக்கிய அறிவித்தல்

**மெடிக் குவிக் ஆய்வு கூடம்**

வலிகாமம் வடக்கு, தெற்கு மக்களின்
நலன் கருதி சுன்னாகம்

Dr. இராஜேந்திரம் கிளினிக்கிலும்

இணுவில், கோண்டாவில், தாவடி,
கொக்குவில், ஆனைக்கோட்டை மக்களுக்காக

குளப்பிட்டிச் சந்தியிலும்

தினசரி காலை 7.30-8.30 வரை பரிசோதனைகள் நடைபெறும் என்பதனை வைத்தியர்கள், வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(72505) அ. சுந்தரலிங்கம் (பரிசோதகர்)


சுகாதாரச் சீர்கேடா? யார் காரணம்?

உள்ளூராட்சிச் சபையா?
சுகாதாரத் திணைக்களமா?

கவலை வேண்டாம்!

**இதோ**

**நல்ல சுத்தம் (கிளீன்வெல்) நிறுவனம்**

உங்கள் தனிச் சுகாதாரத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் மேம்படுத்த வந்துவிட்டது.

''சுத்தம் சுகம் தரும் – முதுமொழி
நல்ல சுத்தம் பொருளாதாரத்தை மேம்படுத்தும்''
– புதுமொழி

உங்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு
தொடர்பு கொள்ளுங்கள்:

**கிளீன்வெல்**

866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2849 (72530)


## 23ஆவது பிறந்ததின வாழ்த்து

10 - 01 - 2000



செல்வன்

**செல்வராசா மோகனதாஸ்**

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த

செல்வராசா நாகேஸ்வரி தம்பதிகளின்

செல்வப் புதல்வன்

செல்வன் மோகனதாஸ்

தனது 23 ஆவது பிறந்த நாளை இன்று (10-01-2000) லண்டனில் கொண்டாடுகின்றார். இவரைப் பிரான்ஸில் இருக்கும் ஆனந்தன் சித்தப்பா, லண்டனில் இருக்கும் பேபின்பச் சித்தப்பா மற்றும் நண்பர்களும் அளவெட்டியில் இருக்கும் அப்பா, அம்மா, வசந்தா அக்கா, வசந்தி அக்கா, தங்கையார் மகிழ்ந்தா, பகிர்ந்தா மற்றும் கல்வாரிச் சபையினரும் யேசுவின் கிருபை பெற்று நீடூழி காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

செ. செல்வராசா - நாகேஸ்வரி

காட்டுப்புலம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி. (72514)

# உதயன்

## கலங்கித் தெளியட்டும்

இன்று நாடு குழம்பிப் போயுள்ளமைக்கும், வன்செயல்கள் நடைபெறுவதற்கும், சீர்குலைந்துள்ளமைக்கும் தொடர்ந்து இடம்பெற்று வரும் போரே காரணம் என்பதில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது.

ஆனால் அரசாங்கத் தலைவர்களும் ஏனைய அரசியல் தலைவர்களும் போரை நிறுத்த வேண்டும் என்பதில் உரிய அக்கறை காட்டுவதாக இல்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது; அதன் பொருட்டு அரசமைப்பை மாற்றுவது; அதற்காக ஐ.தே. கட்சி எம்.பிக்களை ஆளும்தரப்புக்கு இழுப்பதற்காகக் கட்சித்தாவல் சட்டத்தைத் திருத்துவது; நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்துவது என்று பலதும் பத்தையும் ஆளுந்தரப்பினர் கூறி வருகின்றனர். இதில் எதனைச் செய்யப்போகிறார்கள் என்பது குறித்து உத்தியோகபூர்வமான, ஊர்ஜிதமான முடிவு எதுவும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

ஏனைய அரசியல் தலைவர்கள் — தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உட்பட — போரை நிறுத்த வேண்டும் என்று வெறும் அறிக்கைகளை வெளியிடுகின்றார்களே அன்றி, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாக இல்லை.

இலங்கைக்கு வெளிநாடுகள் வழங்கும் உதவி நிதிகளில் பெரும் பகுதி போர்ச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்ற சந்தேகம் நீண்ட காலமாக நிலவுகிறது. அரசாங்கம் அதனை மறுத்து வந்தாலும், நாட்டுக்குக் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே வைத்துக் கொண்டு அரசாங்கம் போரைத் தொடர்கிறது என்று எவரும் நம்புவதற்கில்லை.

இதனை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொல்லி, போரை நிறுத்துவதற்கு அரசாங்கத்தின் மீது அழுத்தம் போடுமாறு இடித்துரைக்கக் கூடிய திறமையும், அக்கறையும் துணிவும் தமிழ் அரசியல் தலைவர்களிடம் இருந்ததில்லை. அந்தக் குறையை அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பூர்த்தி செய்துள்ளார்.

பத்துக்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் கொழும்பில் உள்ள ராஜதந்திரிகளுடன் அவர் கடந்த வாரம் இது குறித்துக் கலந்துரையாடினார். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமானால் வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகளைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். வெளிநாட்டு உதவிகளைப் பெற்று, போரைத் தீவிரப்படுத்த அரசு முனைகிறது என்ற தகவலை ரணில் வெளிப்படையாகக் கூறினார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்பதில் உண்மையான அக்கறை கொள்ளவில்லை என்றும் வெளிநாட்டு உதவிகளைப்பெறுவதற்காகவே அவ்வாறு பூச்சாண்டி காட்டுவதாகவும் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியும் உள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் பொறுப்பற்ற முறையில் அவ்வாறு குற்றஞ்சாட்டி இருக்க முடியாது.

ராஜதந்திரிகளுடனான ரணிலின் கலந்துரையாடல் அவர்களை நிச்சயம் விழிப்புறச் செய்திருக்கும், தாங்கள் கொடுக்கும் நிதி உதவிகளுக்குக் கணக்குக் காட்டுமாறேனும் அரசைக் கேட்க வைக்கும், இல்லையேல் வெளிநாடுகளும் போருக்குத் துணைபோவதாகவே முடியும்; இது விவகாரம் கலங்கித் தெளியட்டும்!

# அமெ. நிபுணரின் விசாரணை பூர்த்தி

கொழும்பு, ஜன. 10

கடந்த மாதம் கொழும்பு நகரசபை வளாகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பான விசாரணைகளில் உதவுவதற்காக இங்கு வந்துள்ள அமெரிக்க சட்ட மருத்துவ நிபுணர்கள் தமது விசாரணைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது விசாரணை தொடர்பான அறிக்கையை அவர்கள் இன்னும் இரு வாரங்களில் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிபுணர்கள் அமெரிக்கா திரும்பிய பின்னரும் இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டு மற்றொரு அறிக்கையையும் சமர்ப்பிப்பார்கள் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-6)

## ஐயப்ப மகரஜோதி விழா

வலி.வடக்கு, ஜன. 10

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் மகர ஜோதி விழா உடுவில் லவ் லேனில் உள்ள நிலையத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் முதல் நடைபெறவுள்ளது.

ஐயப்பன் வரலாறு பற்றி பிரசங்கவாரிதி சிவத்திரு வ. குமாரசாமி சமயப் பிரசங்கம் ஆற்றவுள்ளார். (ஐ-86)

## சுயதொழில் கடனுதவி

தம்பசிட்டிப் பகுதியில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் 16 பெண்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரக உதவியுடன் தலா 10 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

புலோலி மத்தி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி வீ. குமாரசாமி தலைமையில் தம்பசிட்டி மெ.மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக உதவி திட்டப்பணிப்பாளர் என். மகேந்திரன் கடன் திட்டத்துக்கான காசோலையை வழங்கினார்.

# குமாரின் மரணத்திற்கு ஜனாதிபதி அனுதாபம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுச் செய்தியைக் கேட்டவுடன் நான் பெரிதும் கவலையடைந்தேன்.

குமார் பொன்னம்பலத்தின் மறைவு குறித்து அவரது மனைவிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குமாரின் மறைவு குறித்து அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூற விரும்புகிறேன் என்று அந்த அனுதாபச் செய்தியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

ஐ, தே. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அமரர் குமார் பொன்னம்பலத்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தனது கவலையையும் தெரிவித்துக் கொண்டார்.

கொழும்பு ராணி வீதியில் உள்ள குமாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு பல அரசியல் பிரமுகர்களும், அமைச்சர்களும் அஞ்சலி செலுத்தினர். (ஐ-சு)

## திருநெல்வேலி சந்தைப் பகுதியில்

# மருத்துவ மாணவர் உதவியுடன் கடைகளில் திடீர் பரிசோதனை

திருநெல்வேலி, ஜன.10

திருநெல்வேலிச் சந்திக்கு சமீபமாக பிரதான வீதியிலுள்ள கடைகளிலும் வர்த்தக நிலையங்களிலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகலில்பொதுச் சுகாதார பரிசோதகர்கள் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட நான்காவதுஆண்டுமாணவர்களின் உதவியுடன் திடீர்ப் பரிசோதனையைமேற்கொண்டனர்.

இப்பரிசோதனையின் போது கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த — வண்டு அரித்த — பயறு, மல்லி, திகதி காலாவதியான பெரும் எண்ணிக்கையான பிஸ்கட் பைக்கற்றுகள், பால்மா வகைகள், சொக்கிளேற்றுகள் ஆகியன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

நல்லூர்பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சிவபாலன் மற்றும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவபீட நான்காம் வருட மாணவர்களின் உதவியுடன் குழுவாகச் சென்று மழைக்கு மத்தியில் இப்பரிசோதனையை மேற்கொண்டனர்.

தேநீர்க்கடைகள், உணவகங்கள் என்பனவற்றுக்குச் சென்ற இக்குழுவினர் அங்குள்ள சுகாதாரக்குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி விரைவில் அவற்றைச் சீர்செய்ய வேண்டும் என்றும் பணிப்புரை வழங்கினர்.

திகதி காலாவதியானபழுதடைந்த உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இப்பரிசோதனையின் போது பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் காக்கி நிறத்திலான தமது உத்தியோக பூர்வ சீருடையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

## நாளை

மார்கழி 27

செவ்வாய்க்கிழமை

திதி: பஞ்சமி

வைகறை 5.14 வரை.

நட்சத்திரம்: சதயம்

பிற்பகல் 4. 02 வரை.

சுபநேரம்: 11.03—12.33

ராகுகாலம்: 3.33—5.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்பைப் பூட்டி வைக்க முடியாது; வேண்டியவர் வருத்தத்தைக் கண்டால், அது, தானே வெளிப்பட்டு விடும்.

- திருவள்ளுவர்

# செய்திக் கொத்து

## திருவாசக முற்றோதல்

வலி. தென்மேற்கு, ஜன10

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து மாலை 5 மணிவரை திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

இதில் சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை தலைமையில் இசைமணி வி. என். செல்வராசா, சைவப் புலவர் சோ. கோவிந்தராசா, மாவிட்டபுரம் கந்தையா அடியார் கிருஸ்ணன், நவாலியூர் என்.சபாரத்தினம், இசை ஆசிரியை யசோ சிறிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு திருவாசக பாராயண நிகழ்ச்சியை நடத்துவர். (ஐ-185)

## இஞ்சிக்கிழங்கு தட்டுப்பாடு

யாழ். குடாநாட்டில் தற்போது இஞ்சிக்கிழங்குக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து இஞ்சிக்கிழங்கு யாழ்ப்பாணம் எடுத்துவரப்படாததாலும், இங்கு இஞ்சிக்கிழங்கு செய்கை பண்ணப்படாததாலும் இத் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

யாழ். பெரிய கடைக் சந்தையில் ஒரு கிலோ இஞ்சிக்கிழங்கு ஆயிரம் ரூபாவாகத் தற்போது விற்கப்பட்டு வருகிறது. (ஐ-30)

## மைதானம் அமைக்க காணி நன்கொடை

நெடுந்தீவு முன்னாள் கிராம அதிகாரியும் முதலாவது கிராம சபைத் தலைவருமான அமரர் சு. நாகேந்திரனின் ஞாபகார்த்தமாக மத்திய பகுதியில் பொது விளையாட்டு மைதானம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான காணியை நெடுந்தீவு மத்தி முன்னாள் கிராம அதிகாரி நா. கணபதிப்பிள்ளை நெடுந்தீவு பிரதேச சபையிடம் அன்பளிப்பாகக் கையளித்துள்ளார்.

நெடுந்தீவில் சிறந்த விளையாட்டு மைதானம் ஒன்றை இக்காணியில் அமைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்கும் என தலைவர் அ. வெ. அரியநாயகம் தெரிவித்தார். (இ-111)

## தவறணைகள் மூடப்பட்டன

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளதையடுத்து அப்பகுதியில் இயங்கி வந்த பளை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கள்ளுத் தவறணைகளும் மதுபான விற்பனை நிலையமும் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருதங்கேணி, உடுத்துறை, சோரன்பற்று ஆகிய இடங்களில் உள்ள கள்ளுத் தவறணைகளும் மருதங்கேணியில் இயங்கி வந்த மதுபான விற்பனை நிலையமுமே மூடப்பட்டவையாகும்.

இந்தத் தவறணைகள் மூடப்பட்டதால் நூற்றுக்கணக்கான சீவல் தொழிலாளர்கள் தொழில் இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உருவப்பட பிரசுரம் விநியோகம்

சண்டிலிப்பாய். ஜன. 10

கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவள விழாவை முன்னிட்டு அன்னாரின் பெரிய அளவிலான உருவப் படம் ஒன்றை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் வெளியிட்டுள்ளது. சனிக்கிழமை தெல்லிப்பழையில் நடைபெற்ற பவளவிழாவின் போது வருகை தந்தவர்களுக்கு இலவசமாக இப் படம் வழங்கப்பட்டது. (ஐ-135)

## வெங்காயச் செய்கையில் நாட்டமில்லை

வளலாய், ஜன. 10

வளலாய், இடைக்காடுப் பகுதி விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையில் அதிக கவனம் செலுத்தவில்லை.

கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்காமையால் விற்கமுடியாது நஷ்டமடைந்ததை அடுத்தே இம்முறை விவசாயிகள் வெங்காயச் செய்கையில் நாட்டம் கொள்ளவில்லை. (ஐ-178)

## சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

நல்லூர், ஜன. 10

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் பாண்டியன்தாழ்வு கொழும்புத்துறைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலைச் சிறுவர்களுக்கு பாடசாலைக்கான உபகரணங்களை இலவசமாக வழங்கியது.

மாநகரசபை ஊழியர்கள் நலன்புரிச் சங்கம் வருடம் தோறும் நடத்தும் ஒளிவிழா நிகழ்வுகளை இம்முறை நிறுத்தி வைத்துவிட்டு அதற்குரிய செலவுத் தொகையை இதற்கென வழங்கியது. சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-109)

## எல்லையில் பெயர்ப் பலகை

வலி.தென்மேற்கு, ஜன. 10

மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைகளை வரையறுக்கும் பெயர்ப் பலகைகள் விரைவில் நிறுவப்பட உள்ளன.

இதற்கான நடவடிக்கையினை பிரதேசசபை செயலாளர் மேற்கொண்டுள்ளார். (ஐ-185)

## மருத்துவமனைக்கு தளபாடம்

வலி. வடக்கு, ஜன. 10

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் தளபாடங்களை வழங்கி உள்ளனர்.

நீண்ட காலமாக தெல்லிப்பழையில் இயங்குகின்ற மனநோயாளர் விடுதியில் பயன்படுத்தவென மருத்துவபீட 16 ஆம் அணியின் 2 ஆம் பிரிவினர் தளபாடங்களை வழங்கினர். (ஐ-86)

# கல்விக் கல்லூரிகளுக்கான அனுமதி
# இவ்வாரம் இங்கு நேர்முகப் பரீட்சை

## கடிதம் கிடைக்காதோரும் சமுகமளிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 12, 13, 14 ஆம் திகதிகளில் யாழ். கல்வி வலயத்தில் நடைபெறும் என்று வவுனியா கல்விக் கல்லூரிப் பீடாதிபதி த. அழகரட்ணம் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையை இங்கு நடத்துவதற்காக அதிகாரிகள் குழு நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு — பத்திரிகையில் பெயர் விவரங்கள் வெளியானவர்களுக்கு— தனித்தனியான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும்—

அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் மூன்று தினங்களில் ஏதாவது ஒரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றலாம் என்றும்—

தெரிவிக்கப்பட்டது.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ். வதிவிடச்சான்றிதழ் மற்றும் உடற்பயிற்சித் துறைக்கு விண்ணப்பித்தவர்கள் விளையாட்டுச் சான்றிதழ்கள் என்பவற்றின் மூலப் பிரதிகள் மற்றும் போட்டோப் பிரதிகள் என்பவற்றுடன் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும்—

பீடாதிபதி தெரிவித்துள்ளார்,

கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பித்து குறித்த புள்ளிகளைப் பெற்றும் நேர்முகப் பரீட்சைக்கு பெயர் அறிவிக்கப்படாதவர்களும், பெயர் விவரங்களில் குளறுபடி உள்ளவர்களும் 12 ஆம் திகதி யாழ். கல்வி வலயத்தில் தம்மைச் சந்தித்து அவை குறித்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-6)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்.குடாநாட்டில்இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவதுதெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 4 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(128580ஏ), (134422ஏ), (134422பி), (134536ஏ), (134622ஏ), (134622பி), (134685ஏ), (134685பி).

**சாவகச்சேரி**

(126363ஏ), (126363பி), (126363சி), (126363டி). (126363ஈ), (126382ஏ), (126382பி), (126382சி), (126456ஏ), (134886ஏ), (134886பி). (134887ஏ),

**நெடுந்தீவு**

(12546ஏ), (12592ஏ), (12592பி), (12592சி). (12594ஏ). (12594பி), (12594சி),

**யாழ்ப்பாணம்**

(133067ஏ), (133068ஏ), (133092ஏ), (133095ஏ), (133096ஏ), (133099ஏ), (133100ஏ), (133207ஏ), (133208ஏ), (133212ஏ), (133214ஏ), (133216ஏ), (133602ஏ), (104734ஏ), (104734பி), (112392ஏ), (112588ஏ), (116268ஏ). (1233798ஏ) (126553ஏ), (126553பி), (126873ஏ). (126873பி), (128400ஏ], (128401ஏ), [128401பி], [128401சி], [128416ஏ], [128416பி], [128428ஏ), [128467ஏ]. [128467பி], [128467சி], [128467டி]. [128492ஏ], [128508ஏ], [128508பி], [128545ஏ]. [128576ஏ], [128589ஏ]. [128579ஏ], [128625ஏ], [133466ஏ], [133555ஏ], [133555பி], [133736ஏ], [133746ஏ], [133746பி], [133788ஏ].

**கரவெட்டி**

[133094ஏ]. [127522ஏ]. [132924ஏ]. [132924பி], [132924சி]

**ஊர்காவற்றுறை**

[11814ஏ], [11814பி], [11874ஏ], [12372ஏ], [12388ஏ], [12388பி] [12388சி], [12388டி], [12388ஈ], [12388 அவ்], [12408ஏ], [12408பி] [12474ஏ[. (12474பி), (12566ஏ), (12576ஏ), (12579ஏ), (12590ஏ), (12598ஏ), (12598பி), [12600ஏ]. (12601ஏ), (12602ஏ), (12603ஏ), (12605ஏ), (12605பி), (12606ஏ). (12610ஏ), (12613ஏ). (12623ஏ). (12623பி), (12623சி), (12626ஏ), (12626பி), (12627ஏ), (12628ஏ), (12628பி), (12643ஏ), (12644ஏ), (12644பி), (12644சி),

**கோப்பாய்**

(121080ஏ), (121080பி), (123168ஏ), (123168பி), (123233ஏ), (122927ஏ), (124012ஏ), (124012பி), (124023ஏ), (124023பி), (124038ஏ), (124038பி), (128244ஏ). (128244பி), (128250ஏ), (128258ஏ), (128258பி(, (128259ஏ), (128259பி), (128262ஏ), (128262பி). (128265 ஏ), (128277 ஏ), (128296 ஏ), (128299 ஏ), (133883 ஏ), (133883 பி), (133964 ஏ) (134318 ஏ), (134319ஏ ), (134322 ஏ). (134326 ஏ), (134326பி), (134326 சி), (134328 ஏ), (134328 பி). (134328 சி). (134329 ஏ), (134329 பி), (134330 ஏ), (134330 பி), (28106 ஏ), (28106 பி).

**நல்லூர்**

(122911 ஏ),(122930 ஏ), (122993 ஏ), (122993 பி), (123031 ஏ), (123037 ஏ), (123038 ஏ), (123039 ஏ), (123040ஏ), (123041ஏ), (123041பி), (123073ஏ), (123237ஏ), (123237பி), (123237சி), (123894ஏ), (123894 பி). (124273ஏ), (128100ஏ), (128100பி), (128240ஏ), (128254ஏ), (128254பி), (128275ஏ), (133074ஏ). (133075ஏ), (133076ஏ), (133077ஏ), (133079ஏ), (133080ஏ), (133084ஏ), (13308 ஏ), (133088ஏ). (133113ஏ), (133113பி). (133113சி), (133113டி) (133113ஈ), (133187 ஏ), (133187பி). (133197ஏ), (133197பி), (133211ஏ), (133215ஏ), (133683ஏ), (127135ஏ). (127135பி), (127135சி), (134535ஏ). (134535பி), (134561ஏ), (134627ஏ). (134627பி), (134646ஏ), (134646பி), (134646சி), (134663ஏ), (134663பி), (134770 ஏ), (134770பி), (134779ஏ), (134779பி),

**பளை**

(125498ஏ), (124498பி), (125505ஏ), (125505பி),

**பருத்தித்துறை**

(129408ஏ).

**சண்டிலிப்பாய்**

(125043ஏ), (134362ஏ), (134362பி). (134564ஏ) (134564பி), (134574ஏ)' (134574பி), (134574சி), (134574டி), (134574ஈ), (134651ஏ), (134709ஏ).

**தெல்லிப்பழை**

(133884ஏ). (125004ஏ), (134396ஏ), (134396பி), (134396சி). (134396டி). (133396ஈ). (134396எவ்),(134397ஏ), (134 397 பி), (134 821 ஏ),

**உடுவில்**

(121263 ஏ). (128257ஏ), (128286 ஏ), (128 286 பி), (128286 சி), (128286 டி), (128 286 ஈ), (133862 ஏ), (133878 ஏ), (133887 ஏ), (133895 ஏ), (115031 ஏ) (115031 பி), (115031 சி), (115031 டி), (125113 ஏ), (125113 பி). (125113 சி), (125134 ஏ), (125134 பி), (125372 ஏ), (127121ஏ), (127121 பி), (127122 ஏ). (127189 ஏ). (134372ஏ), (134372பி), (134372சி), (134377ஏ), (134377பி), (134378ஏ), (134521ஏ), (134527ஏ), (134547ஏ). (134682ஏ). (134682பி), (134682சி), (134839ஏ).

(தொடரும்)

# புலிகள் தரப்பில் ஐவர் உயிரிழப்பு

கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி பாவற்குளம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது தமது தரப்பில் ஐவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

★ மேஜர் பாவண்ணன் அல்லது சுதாஷ் (பத்மநாதன் உதயசீலன் — கிளிநொச்சி).

★ கப்டன் சீர்மாறன் அல்லது ஜெகன் (பொன்னம்பலம் கபிலன் — அக்கராயன்).

★ கப்டன் இனியன் அல்லது டன்சன் (தங்கராசா சந்திரமோகன் — திருகோணமலை).

★ கப்டன் அன்பரசன் (பெரியகறுப்பன் புவதீஸ்வரன் — மணலாறு).

★ கப்டன் சஞ்சீவன் (கேசவராசா ஆறுமுகநாதன் — திருகோணமலை).

9-8-99 அன்று கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவத்துடனான மோதலில் லெப்டினன்ட் நகுலன் அல்லது இயல்வளவன் (இராசுமுரளீதரன் — அம்பாறை) என்பவர் உயிரிழந்துள்ளார். (சு)

# ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள்

இந்த ஆண்டு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ள திகதிகளை ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:

ஜனவரி—11, பெப்ரவரி — 10, மார்ச்—09, ஏப்ரல் — 06, மே—10, ஜூன்—08, ஜூலை— 11, ஓகஸ்ட்—10, செப்ரெம்பர்—12, ஒக்ரோபர்—05, நவம்பர்—09, டிசெம்பர்— 12. (ஐ-க)

# அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான விசேடகூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக்கல்வி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சீருடை விநியோகம் பற்றி ஆராயப்படவுள்ளதால் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-10-133)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி யோசேப்பின் சின்னையா சிங்கராயர்

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 146, பாங்ஷால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரியோசேப்பின் சின்னையா சிங்கராயர் (08 - 01 - 2000) காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா சிங்கராயரின் அன்பு மனைவியும்; காலஞ்சென்றவர்களான நிக்கிலாப்பிள்ளை –அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், பிரான்சிஸ்கம்மா (விமலா), வலன்ரீனா (ராணி), றோஸ் செலஸ்ரின் (ராஜகுமாரி), அந்தோனிப்பிள்ளை (ஹொலண்ட்), பெனடிக்ற் சிறில் (கனடா), மாகிறேற் சிசிலியா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, யோன் கிங்சிலி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் ஜெயா (ஹொலண்ட்), தயா (கனடா), ஜோர்ச் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (09 - 01 - 2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு(புதிய நேரம்) புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வலன்ரீனா
(மகள்)

146, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (72540)

## முருகேசு கந்தையா சுப்பிரமணியம்

சித்தன்கேணியைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசுமான எம். கே. சுப்பிரமணியம் அவர்கள் 09-01-2000 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தையா, நாகம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், முருகானந்தன் (கொழும்பு), நிதிநேசன் (கொழும்பு, பணிப்பாளர் யாழ். ரியூரோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோயிலடி), ஞானநாயகி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், கலைமகள், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சுமியின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற மாரிமுத்து தெய்வானைப்பிள்ளை, வைத்திலிங்கம் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அ. செல்வராசா (இளைப்பாறிய உதவி வைத்திய அதிகாரி) அவர்களின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-01-2000) திங்கட்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:—
மனைவி, மக்கள்

சித்தன்கேணி. (72545)

## திருமதி சரஸ்வதி பத்மநாதன்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி பத்மநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியை பெரியபுலம் மகா வித்தியாலயம்) 08 - 01 - 2000 சனிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி (பொது வேலைகள் திணைக்களம்), சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரியும், திரு. சின்னத்துரை பத்மநாதனின் (ஓய்வு பெற்ற உபமுகாமையாளர், இலங்கை வங்கி), அன்புமனைவியும், பத்மலதாவின் (U. N. D. P) பாசமிகு தாயாரும் பரமலிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்), பராராஜசிங்கம் (வட்டுக்கோட்டை) பராசக்தியின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, நீலாம்பிகை, நடராஜா, காலஞ்சென்ற புவனேஸ்வரி, சத்தியபாலதேவி, காலஞ்சென்ற சரஸ்வதியம்மா, கணேசமூர்த்திநாதன், காலஞ்சென்ற ரெட்ணதுரை, காலஞ்சென்ற செல்லத்துரை, செல்வரெட்ணம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், விஜித்தா, சுஜித்தா, நர்மதா, பரோதா, ரெட்ணகுமாரி, ஜெயக்குமாரி, சத்தியகாந்தன், சிவ தொண்டன், ராஜாத்தி, செல்லக்குமாரி, செல்லக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியும் விக்னேஸ்வரன், விமலேஸ்வரன், சந்திராஜ் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் 10 - 01 - 2000 திங்கட்கிழமை (இன்று) பிற்பகல் 3-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பத்மநாதன்

12, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (72543)

# பத்திரிகைத்துறையில் விருது வழங்குவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 10

கடந்த ஆண்டில் பத்திரிகை செய்தித்துறையில் தொழில் சார்ந்த திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நோக்கில் போட்டி ஒன்றினை இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

போட்டியில் மும்மொழிகளிலும் பிரசுரமாகும் பத்திரிகைகளில் பணியாற்றுபவர்களும் கலந்து கொள்ளலாம்.

இந்தப்போட்டிகளில் சுதந்திர நடுவர் குழுவொன்று விருதுக்குரியவரைத் தெரிவு செய்யும்.

வழங்கப்படவுள்ள 12விருதுகளின் வகைகளும் வருமாறு—

★ வருடத்தில் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் டி சில்வா விருது.

★ பொதுமக்களினதும் ஏனையோரினதும் பாராட்டுதல்களைப் பெற்ற பத்திரிகையாளருக்கான விருது.

★ பத்திரிகைச் சுதந்திரத்துக்காக தைரியத்துடன் கடமையாற்றிய பத்திரிகையாளருக்கான சேபால குணசேன விருது.

★ மனிதாபிமானம் தொடர்பான செய்தியை பிரசுரித்த பத்திரிகையாளருக்கான விருது.

★ வருடத்தின் பிரசுரிக்கப்படாத செய்தியொன்றை எழுதிய பத்திரிகையாளருக்கான விருது.

★ வருடத்தின் சிறந்த கேலிச்சித்திரக்காரருக்கான விருது.

★ வருடத்தின் சிறந்த புகைப்படத்துக்கான விருது.

★ வருடத்தின் சிறந்த புகைப்படப் பிடிப்பாளருக்கான விருது.

★ சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட பத்திரிகை பக்கத்துக்கான விருது.

★ இளைய பத்திரிகையாளருக்கான விருது.

★ விசேட, சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் செய்தி சேகரித்த செய்தியாளருக்கான விருது.

★ நடுவர்களினால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய விசேட விருதுகள்.

பத்திரிகைத்துறையைச் சார்ந்த எந்தப் பத்திரிகையாளரும் அல்லது ஆசிரியரும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதவிப்பணம் பெறுவோர் விவரம் இன்று மீளாய்வு

வலி கிழக்கு, ஜன. 10

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுவோரது விவரங்கள் மீளாய்வு செய்யப்பட உள்ளன.

உதவிப்பணம் பெறும் அனைவரும் இன்று திங்கட்கிழமை தத்தமது பகுதிகிராம அலுவலர்களின் அலுவலகங்களில் நடைபெறும் மீளாய்வுப் பணிக்கு சமூகமளித்து விவரங்களை மீளாய்வு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

மீளாய்வு செய்யப்படாதவர்களின் கொடுப்பனவு இம்மாதம் முதல் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ– 180)

# மந்திகையில் இரத்தவங்கி ஆரம்பம்

நெல்லியடி, ஜன. 10

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மந்திகை மருத்துவமனையில் இரத்தவங்கி செயற்படத் தொடங்கியுள்ளது.

இரத்தம் வழங்க விரும்புவோர், உடனடியாகமாவட்ட வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

இங்கு பிரெஞ்சு மருத்துவக் குழுவின் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதனால், சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கு குடும்பத்திட்ட சத்திர சிகிச்சையும், வாரத்தில் செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும் நடைபெறும் என பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும்பெருமாள் தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

# தையல் பயிற்சிக்கு 40 பேர் தெரிவு

சண்டிலிப்பாய், ஜன. 10

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் 2000 ஆவது ஆண்டுக்கான தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி அளவெட்டி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விண்ணப்பித்த யுவதிகளுக்கான நேர்முகப்பரீட்சை கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றபோது 40 பேர் பயிற்சி பெறத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராசா தெரிவித்தார்.

(ஐ-135)


## வணிகப் பிரமுகர்களே!

எம்மிடம் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அப்பியாசக் கொப்பிகள், C. R. கொப்பிகள், என்வலப் வகைகள், மனேஜ்மென்ற் டயறிகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். இவற்றைத் தொகையாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

### சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2567 (72528)


## நன்றி கூறுகின்றோம்

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிபவர்களுக்கு பல நெருக்கடிகள், இடையூறுகள் மத்தியிலும் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுக்கமுன்னின்று உழைத்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்

உயர்திரு. வி. கே. ஜெகன் அவர்களுக்கும்

E. P. D. P. யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

உயர்திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும்

மற்றும் ஒத்துழைப்பு நல்கிய E. P. D. P. யின் யாழ். செயலக உறுப்பினர்களுக்கும் கொழும்பு தலைமைச் செயலக உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எந்த வேளையிலும் தமது கல்வி நிலையத்தை தந்துதவிய D. M. I. கல்வி நிலைய நிர்வாகி அவர்களுக்கும் இந்த நியமனத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய N. E. P. ஆளுநர் அவர்களுக்கும் N. E. P. இணைப்பு அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் யாழ். அரசாங்க அதிபர், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், அனைவருக்கும் எமது செய்திகளை வெளியிட்டு உதவிய உதயன் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

தொண்டர் ஆசிரியர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(72551)

உரும்பிராய்

## சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்

## மகோற்சவம் -- 2000

10-01-2000 திங்கள் — கொடியேற்றம் - வசந்த மண்டபப் பூசை: காலை 10.00 மணி

20-01-2000 வியாழன் — தேர்த்திருவிழா - வசந்த மண்டபப் பூசை: காலை 8.00 மணி

21-01-2000 வெள்ளி — தீர்த்தத் திருவிழா - வசந்த மண்டபப் பூசை: காலை 9.00 மணி

உபயகாரர்களும், பரிபாலன சபையினரும்.
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்.

உரும்பிராய். [72550]

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

திரு. ஸ்ரீ. மகிந்தா

அவர்களின் அன்புத் தந்தையார்

### து. ஸ்ரீ பத்மநாதன்

அவர்கள் 08—01—2000 அன்று காலமானதையிட்டு அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
நலன்புரிச் சங்கத் தலைவரும்,
உறுப்பினர்களும்.

பிரதேசசெயலகம்,
சங்கானை. (ஜி/10561)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் அருணாசலம் உலகநாதன்

( உரிமையாளர், வேல் ரேட் சென்ரர்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் )

அவர்கள் 06 - 01 - 2000 அன்று இறைபதமெய்தி விட்டார். அன்னாரின் பிரிவால் ஆறாத்துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஸ்தாபனத்தாரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

RTK ஸ்தாபனம்,
A M T எரிபொருள் நிலையம்.

இருபாலைச் சந்தி, கோப்பாய். (72563)

## மரண அறிவித்தல்

### அருணாசலம் உலகநாதன்

(வேல் ரேட் சென்ரர், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)

அருணாசலம் உலகநாதன் அவர்கள் 06-01-2000 வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் இருபாலையைச் சந்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் (குட்டியப்பா)—இரத்தினம் தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை—ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் செங்காதேவியின் அன்புக் கணவரும் செங்கநாதன் (பாபு), கைலைநாதன் (கோபி, நோர்வே), காசிநாதன் (கொழும்பு), கதிர்காமநாதன் (பாலா, கனடா), உமாதேவி, உஷாதேவி (4 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), உமியாதேவி (4 ஆம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் கனகமணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நந்தகுமாரின் அன்பு மாமனாரும் பிரசாந்தன், ஜனார்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சிவஞானம், கோதிநாதன் ஆகியோரின் மைத்துனரும் செங்காகரன், செங்கேஸ்வரி, தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சிவபாக்கியம், பாலசுப்பிரமணியம், இராசலக்சுமி ஆகியோரின் சகலனும் சிவகுமாரன், சிவகுமாரி, சிவகாந்தன், சிவகௌரி, சிவசௌந்தரி, உமையாள், முகுந்தன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10—01—2000) திங்கட்கிழமை காலை 10-30 மணியளவில் இருபாலை இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய். (72562)

# அரசும் வீரவிதான அமைப்புமே குமார் கொலையின் சூத்திரதாரிகள்

## கனத்தையில் விக்கிரமபாகு கருணாரட்ண உரை

கொழும்பு,ஜன.10

'குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கமும் வீரவிதான அமைப்புமே சூத்திரதாரிகள்'

மேற்கண்டவாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண குற்றஞ் சாட்டினார்.

பொரளை கனத்தை மயானத்தில் நேற்று நடைபெற்ற குமார் பொன்னம்பலத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியில் செயற்பட்ட குமார் பொன்னம்பலம் போன்ற தலைவர்களைப் படுகொலை செய்வதன் மூலம் இந்த நாட்டிலே ஒரு போதும் அமைதியை நிலை நாட்ட முடியாது எனவும் - அவர் தெரிவித்தார்.

உரை நிகழ்த்திய பலரும் குமார் பொன்னம்பலத்தின் அபிலாஷைகள் நிறைவேற வேண்டுமானால் தமிழ் இளைஞர்கள் ஒன்றுதிரள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

குமார் பொன்னம்பலத்தின் இழப்பு இலங்கைவாழ் தமிழ்மக்கள் அனைவருக்கும் ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பு எனவும் -

அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமானால் தமிழர் நலன் தொடர்பாக அவரது அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அஞ்சலி உரை நிகழ்த்திய பலரும் ஒருமித்த குரலில் அறைகூவல் விடுத்தனர்.

இதேவேளை அஞ்சலி உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.சந்திரசேகரன் மற்றும் பி.பி.தேவராஜ் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் குமார் பொன்னம்பலத்துக்கு வழங்கப்பட்ட மாமனிதர் விருது பற்றியும் குறிப்பிட்டனர் என பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-7)

### கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் கொட்டாஞ்சேனை கெய்ட்டி தியேட்டரில் படம் பார்த்துவிட்டு வெளியே வந்தவர்களைப் பொலீஸார் விசாரித்தனர் என்றும்-

பின்னர் அவர்களில் 85பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-க-3)

### பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

பயணிகள் இன்று காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் -

அங்கிருந்து நாளை கப்பலில் அவர்கள் ஏற்றப்படுவர் என்றும் - யாழ்.சிவில்நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

### களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் - நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கைதிகள் களுத்துறை, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளனர்.

ஒருவர் மட்டும் நாகொடை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். (இ-3-8)

### புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகுதியில் இடம்பெற்ற மற்றும் ஒரு சம்பவத்தில் விடுதலைப்புலிகளுக்குப் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுக்குத் தெற்கே படையினரின் கலிபர் தாக்குதலில் இரு விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3-7)

### குமார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதை அடுத்து அமரரின் பூதவுடல் தாங்கிய பேழை ஊர்வலமாக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கனத்தையில் நடந்த அஞ்சலி நிகழ்வில் மலையக மக்கள் சார்பில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் எஸ்.சந்திரசேகரன், இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ், முஸ்லிம் மக்கள் சார்பில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகீர் மௌலானா,தமிழர் பணிக் குழுத் தலைவர் எஸ்.விஜயசிங்கம், பத்திரிகையாளர் சார்பில் தினக்குரல் ஆசிரியர் எஸ்.சிவநேசச்செல்வன் மற்றும் தமிழ் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

இதை அடுத்து அமரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வுகளில் யாழ். மாநகர பிரதிமேயர் என்.ரவிராஜ், ரெலோ அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அ.அடைக்கலநாதன், எஸ்ஸ்ரீகாந்தா,ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர்நாயகம் சுரேஸ்பிரேமச்சந்திரன், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோ கணேசன்,புளொட்அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் சட்டத்துறை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. சார்பில் எவரும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-7)

### ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

புலிகளுடன் இணைந்து செயலாற்றிய சக்திகள் குறித்துப் போதுமான விவரங்கள் கிடைத்துள்ளன என்றும்- இரகசிய பொலீஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதன் பின்னணியில் நாட்டின் கோடீஸ்வர வர்த்தகர்கள் ஐ.தே.கவுக்கு மட்டுமல்லாது விடுதலைப் புலிகளுக்கும் நிதியுதவி வழங்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாக யூனியன் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.சண்முகநாதனின் மனைவியான ரேணுகா சண்முகநாதன் தற்சமயம் விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்றும் -

எதிர்வரும் நாள்களில் மேலும் பலர் விசாரணைக்கு உள்ளாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாக ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் கடுமையாக விமர்சித்து வந்த இவர்கள் கடைசி முயற்சியாக அவரைக் கொல்ல முயன்றனர் என்றும் -

இதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் கோடீஸ்வர வர்த்தகர்கள், தனியார் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், சில படை அதிகாரிகள் ஆகியோர் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுகிறது என்றும் - இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-7)

### பல்கலை.மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழக வளாக வீதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன்,பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் அமரர் குமாருக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அதில் காணப்பட்ட வாசகங்கள் சில வருமாறு:-

* தமிழ் இனத்துக்காகக் குரல் கொடுத்துத் தன்னுயிரை அர்ப்பணித்த புத்திஜீவிகளில் மறத்தமிழனும், மாமனிதனுமான குமார் பொன்னம்பலத்துக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

* இதய சுத்தியுடன் பாடுபட்ட மறத்தமிழன் குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழ்ச் சமுதாயத்துக்கு ஈடுசெய்யமுடியாத பெரும் இழப்பாகும். அவரை என்றென்றும் எமது நினைவில் நிறுத்துவோம்.

* புத்தி ஜீவிகளே! இதய சுத்தியுடனும், நேர்மையுடனும் தமிழர்களுக்காகப் பாடுபட்ட மறத்தமிழன் குமார் பொன்னம்பலத்தின் மிலேச்சத்தனமான படுகொலையைக் கண்டிக்காதது ஏன்?

* தான் கற்றதை தன் இனத்தின் சாவுக்கே தாரை வார்த்துக் கொடுத்தோரும் இங்கு உள்ளர். ஆனால் தான் கற்றதை தமிழுக்குப் பயன்படும்படி சேவையாற்றியவர் குமார். இன்று எம் இனம் அவருக்காகக் கண்ணீர்வடிக்கிறது.

குமார் பொன்னம்பலத்தின் மறைவையொட்டி கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திலும்,அதன் திருமலை வளாகத்திலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. (இ-3-9-150)

## தன் உயிருக்கு அச்சுறுத்தல் என்கிறார் ஜெயலத் எம்.பி.

கொழும்பு,ஜன.10

"வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேசியதாக பொய்ப் பிரசாரம் செய்து எனது உயிருக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது" என்று ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்தனா தெரிவித்துள்ளார்.

வன்னி சென்று தான் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசவில்லை என்றும் -

அப்பாவிப் பொதுமக்களுக்கு மருத்துவ வசதிகளை மட்டுமே செய்து கொடுத்ததாகவும் ஆனால் புலிகளின் ஆளாக தன்னைக் காட்டி தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் -

தன்னைச் சிலர் அவ்வப்போது பின்தொடர்ந்து வருவதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

## மற்றுமொருவர் உயிரிழப்பு

'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையின்போது தமது தரப்பில் மேலும் ஒருவர் உயிரிழந்தார் என்று நேற்று இரவு விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

பிரதீபா (பாலிப்போடி நிஷாந்தினி - மட்டக்களப்பு) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-8)

## பரிசளிப்பு விழாவும் எழுச்சி விழாவும்

கொக்குவில் ஜன.10

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் புத்தாயிரமாம் ஆண்டு எழுச்சி விழாவும் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆ.சி.நடராஜா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.இராசையா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் கலந்துகொள்வார்.

இந்த விழாவில் புத்தாயிரமாம் ஆண்டு சிறப்பு மலரான 'வயவள்' எனும் நூலை யாழ்.செயலக கணக்காளர் கா.நாகராஜா வெளியிட்டு வைப்பார்.

இந்த விழாவில் பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர்கள் சிலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.அத்துடன் சென்ற வருட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 4ஏ எடுத்த இப் பாடசாலை மாணவனுக்கு பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினால் தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட உள்ளது. (இ-69)

## ஒரே இரவில் 3 கடைகளில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன10

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 3 கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள பெயின்ற் கடை, பான்சி கடை மற்றும் பலசரக்குக் கடை என்பனவற்றிலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதமும் சுன்னாகம் பகுதியில் இதேபோன்று இரு கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாஜ்பாய்க்கு சத்திரசிகிச்சை

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு நேற்றுக் காலை புதுடில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவமனையில் கண்திரை நீக்க (கட்ராக்) சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சை முடிந்து ஒரு மணி நேரத்தில் பிரதமர் வாஜ்பாய் ஆஸ்பத்திரியில் இருந்து வீடு திரும்பினார். (இ-7)

## வாகன விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.10

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் மூன்று ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

ஆறுமுகம் அருள்தாஸ் (வயது 23) எஸ்.நவசோதி (வயது31), ஏ.ஜோர்ஜ் (வயது27) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஊர்காவற்றுறைப் பகுதியில் வான் ஒன்றில் மேற்படி நபர்கள் சென்றுகொண்டிருந்தபோது வான் சில்லு காற்றுப்போனதால் வான் மரம் ஒன்றுடன் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-9)

## வயோதிபர் கிணற்றுக்குப் பலி

கொக்குவில்,ஜன.10

வயோதிபர் ஒருவர் கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

கோண்டாவிலைச்சேர்ந்த தியாகு முத்துமாலை (வயது 76) என்பவரே இறந்தவர் ஆவார்.

## கிரிக்கெட்

### நியூஸிலாந்து வெற்றி

வெலிங்டன்,ஜன.10

நியூஸிலாந்து - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையில் நியூஸிலாந்தில் நடைபெற்றுவரும் ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 36.3 ஓவர்களிலேயே வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றது. (இ-8-4)

### பாகிஸ்தான் வெற்றி

பிறிஸ்பென்,ஜன.10

மூன்று நாடுகள் பங்குபற்றும் 'கால்ட்டன் தீன் யுனைட்டெட்' ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றைய முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலிய அணியை 45ஓட்டங்களால் வென்றது.

நேற்றைய ஆட்டத்தின் நாயகனாக அப்துர் ரசாக் தெரிவு செய்யப்பட்டார். போட்டிகளில் பங்குபற்றும் மற்றோர் அணியான இந்தியா இன்று பாகிஸ்தான் அணியுடன் பிறிஸ்பெனில் மோதும். (இ-8-4)

### ஆரம்பவிழா இன்று

கொழும்பு,ஜன.10

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இளைஞர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் ஆரம்ப விழா இன்று கொழும்பு எஸ்.எஸ்.ஸி.மைதானத்தில் நடைபெறும்.

இந்தத் தொடரில் நாளை நடைபெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் இலங்கை, நெதர்லாந்து அணிகள் மோதவுள்ளன. (இ-4-8)

### சொய்ப் அக்தர் விளையாட அனுமதி

சிட்னி,ஜன.10

ஆஸ்திரேலியாவில் நேற்று ஆரம்பமான - மூன்று நாடுகள் பங்குபற்றும் - ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித்தொடரில் பாகிஸ்தான் அணியில் அதிவேகப் பந்துவீச்சாளர் சொய்ப் அக்தர் இடம்பெற்றிருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அக்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நீக்கியதைஅடுத்து அவர் நேற்றைய ஆட்டத்தில் பங்குபற்றினார். (இ-4-8)

### சுட்டுக்கொலை

வவுனியா,ஜன.10

திருகோணமலை சாம்பல் தீவுப் பகுதியில் அழகராசா எனப்படும் 17வயது இளைஞன் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்


நாளை ஆரம்பம்

A/L 2001

கணக்கீடு

D.Sam

(பிரத்தியேக வகுப்பு)

கட்டுப்பாட்டுக் க/கு

காலை 6.15(ப.நே)

76/2 கோவில் வீதி

யாழ்ப்பாணம்.(சி-10562)

இணைந்த கணிதம்

A/L 2002 - 2001

நா.அம்பி B.Sc.

புதிய அலகுகள்

ஆரம்பம்

10.1.2000 - திங்கள்

(3.30 pm)

பொருளியற் கல்லூரி

(யாழ். கிளை நிறுவனம்)

கே.கே.எஸ்.றோட்,

இணுவில்.

(72565)

தவறிவிட்டது

செல்லத்துரை திருமாறன் ஆகிய (முடக்காடு, நெல்லியடி, கரவெட்டி) எனது தேசிய அடையாள அட்டை (702150370V), 524 பிரிகேட் பாஸ் என்பன 07.01.2000 அன்று பல்கலைக்கழகத்துக்கும் கோண்டாவிலுக்கும் (பொற்பதி வீதி ஊடாக) இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

செ.திருமாறன்

நெல்லியடி,
கரவெட்டி

(72558)

விக்னா கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L

பிரிவு 1
DAY CLASS ஆரம்பம் 14.1.2000
8.30 - 1.30 மணி

பிரிவு 2
EVENING CLASS
3.15 - 5.15 மணி

ஆண்டு 10, 9, 8, 7; 6 - ஆரம்பம் - 11.01.2000

❊ கடமை கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்

❊ DAY CLASS இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே!

(72552)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.